**செய்தி வெளியீடு எண்: 216** **நாள்: 10.04.2013**

# <u>பத்திரிக்கை செய்தி</u>

புதுவாழ்வு திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டம் தமிழகத்தின் 26 மாவட்டங்களில் உள்ள 120 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்குவதற்காகவும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது சம்பந்தமாகவும், காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் நிறுவனத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 15, 16 தேதிகளில் கருத்துப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. இதில் ஆந்திரப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, மேற்கு வங்காளம், குஜராத், மத்திய பிரதேசம், மகராஷ்டிரா முதலிய 15 மாநில உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதன் மூலம் நமது மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டு வரும் புதுவாழ்வு திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகளை தங்கள் மாநிலங்களிலும் எவ்வாறு செயல்படுத்தலாம் என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிந்து கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக நடைபெற்று வரும் புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் போன்றவற்றின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொண்டு, ஒடிஸா மாநிலத்தில் வாழும் ஏழை மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு, ஒடிஸா மாநில பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் திரு. கல்பத்தரு தாஸ் அவர்களின் தலைமையில் உயர்மட்ட குழு இன்று தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தனர்.

இன்று காலை ஒடிஸா மாநில பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் திரு. கல்பத்தரு தாஸ் அவர்கள் தலைமையிலான உயர்மட்டகுழு மாண்புமிகு கே.பி. முனுசாமி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்களின் சிறப்பான செயல்பாடுகளை விளக்கமாக தெரிந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில், புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடைமுறைகளை விளக்கமாக அறிந்து கொண்டார்கள்.

ஒடிசா மாநிலத்திலிருந்து வந்திருந்த உயர்மட்ட குழு, தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் இத்திட்டத்தை தெரிந்து கொண்டு, திட்டத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகளை தங்களின் மாநிலத்திலும் மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்கள். இந்த நிகழ்ச்சியின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. சி.வி. சங்கர், IAS., புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், IAS., கூடுதல் இயக்குநர் திருமதி. சஜீவனா மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திட்ட இயக்குநர்,
புதுவாழ்வு திட்டம்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**